செ.வெ.எண்-16 நாள்-06.09.2021

# அரியலூர் மாவட்டம்
# பாரம்பரிய உணவு பொருட்களை நமது உணவு நடைமுறையில் பழக்கமாக்கிகொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் பேச்சு.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்தின் சார்பில் ஊட்டச்சத்து மாதத்தினை முன்னிட்டு, ஊட்டச்சத்து உணவுகள் மற்றும் காய்கறிகள் அடங்கிய கண்காட்சி அரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (06.09.2021) திறந்து வைத்து, பார்வையிட்டார்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது,**

வருடந்தோறும் செப்டம்பர் 1 முதல் 30 வரை ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சி மூலமாக ஊட்டச்சத்து அவசியம் குறித்து பொதுமக்களிடையே தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பெண்கள் ஊட்டச்சத்தின் அவசியம் குறித்து தெரிந்துகொண்டு, தங்களது குடும்பத்தாருக்கும், சுற்றுப்புறத்திலுள்ள நபர்களுக்கும் அது குறித்து எடுத்துரைக்க வேண்டும். மேலும், கர்ப்பிணித்தாய்மார்கள் கர்ப காலத்தில் 10 கிலோ எடை அதிகரிக்க வேண்டும். இதன் மூலமாக இரத்த சோகை உள்ளிட்ட நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படுவதுடன், எடை குறைந்த மற்றும் ஆரோக்கியமற்ற குழந்தைகள் பிறப்பது முற்றிலுமாக தடுக்கப்படும். எனவே, அனைத்து தாய்மார்களும் சத்தான உணவுகளை நமது உணவு பழக்கத்தில் சேர்த்துக்கொள்ளும் வகையில் தங்களது இல்லங்களை சுற்றிலும் காய்கறி தோட்டங்களை அமைக்க முன்வர வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் முருங்கைகீரை, கொய்யா உள்ளிட்ட உணவு பொருட்களில் அதிகபடியான சத்துக்கள் நிறைந்துள்ளன.

அரியலூர் மாவட்டத்தில் இயங்கும் 6 வட்டாரங்களில் 774 அங்கன்வாடி மையங்கள் மூலமாக ஊட்டச்சத்து விழிப்புணர்வு குறித்து அங்கன்வாடி பணியாளர்கள் குழந்தைகளின் வீடுகளை பார்வையிட்டு குழந்தைகளின் எடையை அளவிட்டு தாய்மார்களிடம் ஊட்டச்சத்து நிலை குறித்து அறிவுரை வழங்கி வருகிறார்கள். மேலும், இப்பொருள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மற்ற துறைகளுடன் இணைந்து உறுதிமொழி எடுத்தல், கண்காட்சி வைத்தல், கோலம் போடுதல் போன்ற செயல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, பொதுமக்கள் அனைவரும் நமது அன்றாட உணவு பழக்கத்தில் ஊட்டச்சத்து மிக்க உணவு பொருட்கள் இடம் பெறுவதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னூலாப்தீன், திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம்) திருமதி.எம்.சாவித்திரி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.அன்பரசி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**